# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# *2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பௌத்தர்களின் உலக ஒன்றிய இலங்கை நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

*(2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2009, சனவரி மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 10.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பௌத்தர்களின் உலக ஒன்றிய இலங்கை நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. கூட்டி. 4 /2007

### உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கை யில் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பௌத்தர்களின் உலக ஒன்றிய இலங்கை நிலையம் (கூட்டி ணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பௌத்தர்களின் உலக ஒன்றிய இலங்கை நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “நிலையம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பௌத்தர்களின் உலக ஒன்றிய இலங்கைப் பிராந்திய நிலையத் தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகைய அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “பௌத்தர்களின் உலக ஒன்றிய இலங்கை நிலையம்” என்ற பெயர், மகுடத்தின்கீழ் இடையறா

வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பௌத்தத்களின் உலக ஒன்றியத்தினுள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் ;

(ஆ) பௌத்த கோட்பாடுகளை அனுசரிக்குமாறு உறுப்பாண்மையைத் தூண்டுதல் ;

(இ) பிராந்திய மற்றும் உலகளாவியரீதியில் பௌத்தர்களிடையே ஐக்கியத்தை விருத்திசெய்தல் ;

(ஈ) பிராந்திய அதேபோன்ற உலகின் ஏனைய பாகங்களிலுள்ள பௌத்தர்களிடையே பௌத்த சாதனத்தை ஊக்குவித்தல் ;

(உ) பௌத்த தத்துவங்கள் அத்துடன் பௌத்த கலாசாரத்தை தாமாகவே முன்னெடுத்துச் செல்வதற்கு பௌத்தர்களைக் குறிப்பாக பௌத்த பெண்களைத் தூண்டுதல் மற்றும் உதவிபுரிதல் ;

(ஊ) பௌத்த மதம் மீதான ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் பௌத்த மதம் தொடர்பிலான தோதான வாசகங்கள் வெளியிடுவதனையும் மேற்கொள்ளல் ;

(எ) பௌத்த குருமாரின் சமயக் கல்வியை மேம்படுத்துவதற்காக தோதான வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஏ) பௌத்த நம்பிக்கையைப் பின்பற்றுவோருக்கு சமூக, கலாசார, கல்வி மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்;

(ஐ) பௌத்த நம்பிக்கையைப் பின்பற்றுவோருக்கிடையில் சமாதானம், ஐக்கியம் மற்றும் நட்புறவினை ஊக்குவித்தல் ;

(ஒ) பௌத்த நம்பிக்கையுடையோர்களது நன்மைக்காக உள்ளூர் ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பௌத்தர் களின் உலக ஒன்றியத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்காக பௌத்த நம்பிக்கையுடையவர்களுக்கு விரிவுரிரைகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், கண்காட்சிகள் மற்றும் வேறு தோதான நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும் ;

(ஔ) இலங்கைக்கான பௌத்த விருந்தினர் குறிப்பாக பௌத்தர்களின் உலக ஒன்றிய பிராந்திய நிலையங் களின் பிரதிநிதிகளுக்குத் தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளை வழங்குதல் ; அத்துடன்

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களைக் கொண்டுள்ள வேறு நிறுவனங்கள் மற் றும் ஒழுங்கமைப்புகளுடன் இணைந்து செயற்படுத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை மற்றும் நிருவாகம் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான முறையில் தெரிவுசெய்யப்பட்ட பதவிதாங்குநர்கள் மற்றும் அத்தகைய எண் ணிக்கையினரான குழு உறுப்பினர்கள் ஆகியோரைக்கொண்ட (இதனகத்துப்பின்னர் “நிறைவேற்றுக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறைவேற்றுக் குழுவொன்றினால் இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவின் முதலாவது உறுப்பினர்கள் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகித்த உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண் டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பின்வரும் தத்துவம் அடங்கலாக –

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) நிதியைத் திரட்டவும் காசாகவோ அல்லது பண்டமாகவோ மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறவும் ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் அத்துடன் வேறு கொடுத்து மாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றைத் தயாரிக்கவும், வரையவும், கையேற்கவும் கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பு செய்யவும், கொடுத்து மாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளை ஆரம்பிக்கவும் செயற்படுத்தவும், பேணவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை நிறைவேற்றுக் குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமனஞ்செய்யவும், தொழிலுக்கமர்த்தவும், பதவிநீக்கஞ் செய்யவும் அல்லது அவர்களின் சேவையை முடிவுறுத்தவும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகிக்கவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக ஆளணியினரை இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பயிற்றுவிக்கவும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்கும் அவசியமான அல்லது உசிதமான ஏனைய சகலவற்றையும் செய்யவும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் எல்லாக் கருமங்களுக்காக அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றிற்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், விலகல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகுதல் அத்துடன் உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் ;

(ஆ) நிறைவேற்றுக் குழுவின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களாக பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பதவிதாங்குநர்களின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனமும், தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் ;

(ஈ) நிறைவேற்றுக்குழு, கூட்டுத்தாபனம் அல்லது அதன் ஏதேனும் துணைக்குழுக் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும்போதும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல்கள், கூட்ட நடப்பெண்ணும் அவற்றில் அலுவல்களை நிறைவேற்றுதலும் ;

(உ) நிறைவேற்றுக்குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமையும் தகைமையீனங் களும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் (1) ஆம் உட்பிரிவின் விதி யொன்றென்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரத்திலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்திற்கு கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்படைப்பணம், உதவுதொகை, கட்டணங் கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகக் கிடைக்கப் பெற்ற எல்லாப் பணங்களும் நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலிலும் புரிதலிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவுகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படு தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் நிறைவேற்றுக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*(4)* இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ, அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருளாகும்.

*நிலையத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் நிலையத்திற்கு செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்திற்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிலையத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் நிலையத்தால் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப் படுதல்.*

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புகளைத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக அவரிடமிருந்து காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய ஒப்பப் பணத்தொகையை விஞ்சுகின்ற, ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ள னவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, நிறைவேற்றுக்குழுவின் இரு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாது. அத்துடன் அவர் கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*